Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I. TIRUPATTUR
C.M.P.NO.10440/2024
DEPOSITION OF COMPLAINANT SIDE EVIDENCE No.2 Page.No.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பழனி | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | ராஜமாணிக்கம் | தொழில் | விவசாயம் |
| கிராமம் | திருப்பத்தூர் | மதம் | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | வயது | 50 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 )on the 28th day of April 2025.

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**பிரிவு 200 கு.வி.மு.ச.ன் படி விசாரணை.-**

நான் திருப்பத்துரில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். மருத்துவர் வாசுதேவனுக்கு சொந்தமான நிலம் சின்னவெங்காயப்பள்ளி கிராமத்தில் உள்ளது. அந்த நிலத்தை பார்வையிடுவதற்காக மே 20, 2024 அன்று காலை 7.00 மணியளவில் மருத்துவர் வாசுதேவன் மற்றும் நான் சென்றோம். அப்போது பொதுப்பணிதிலகத்திடம் பணி செய்யும் ஆறுமுகம் என்பவர் கையில் கத்தியுடனும், 2 அடியாட்கள் கையில் சுத்தியுடன் அங்கு அமைக்கப்பட்டிருந்த கம்பிவேலியை உடைத்து கொண்டிருந்தார்கள். அதனை நாங்கள் இருவரும் கேட்டபோது, ஆறுமுகம் என்பவர் கத்தியை காட்டி எங்கள் முதலாளி பொதுப்பணித் திலகம் தான் உடைக்கச் சொன்னார் என்று கூறினார்கள். தடுக்க வந்தால் கத்தியால் வெட்டி விடுங்கள் என்று அவர் சொன்னதாக எங்களிடம் தெரிவித்தார். அதனால் பயந்து நாங்கள் அப்படியே நின்று விட்டோம்.

அவர்கள் கம்பியை உடைத்து விட்டு இருசக்கர வாகத்தில் சென்றுவிட்டார்கள். உடனடியாக மருத்துவர் வாசுதேவன் 100 தொலைபேசி எணிணிற்கு தொடர்பு கொண்டார். சிறிது நேரத்தில் போலீசார் வந்துவிட்டார்கள். அங்கு உடைக்கப்பட்டிருந்த கம்பிகளை வீடியோ பதிவு செய்தார்கள். ஜோலார்பேட்டை காவல்நிலையத்தில் புகார் கொடுக்க சொன்னார்கள். அவ்வாறு புகார் கொடுக்க சென்ற போது உதவி ஆய்வாளர் சி.எஸ்.ஆர் மட்டும் வழங்கி விட்டு எங்களை அனுப்பிவிட்டார்கள். சம்மந்தப்பட்ட நபர்கள் மீது எந்த நடவடிக்கையும் அவர்கள் எடுக்கவில்லை. அவர்கள் மீது நடவடிக்கை

எடுக்க சொல்லி மருத்துவர் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். உடைக்கப்பட்ட கம்பி வேலியின் மதிப்பு ரூ.1,20,000/-ம் ஆகும்.

Signature of witness.